# **In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.31/2023 தேதி- 24.09.2025
(P.W.1) - வறுவேல்

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதி என்னுடைய உறவினரா என்றால் இல்லை ஒரே ஊரை சார்ந்தவர். 11.07.2018-ல் வழக்கு பட்டிகை சொத்தான ஏமற்றும் பி-பட்டிகை சொத்தை கிரையம் கொடுப்பதாக ஒரு கிரைய ஒப்பந்தம் இவ்வழக்கின் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் இல்லை. பிரதிவாதி 11.07.2018-ல் பள்ளியாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1888/2018 -ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான் ஆனால் 8 3/4 சென்ட்க்கு மட்டும் தான் எழுதிக் கொடுத்தேன், 9 3/4 சென்ட்க்கு அல்ல. மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் தொகையாக 3 லட்சம் பேசி அன்றேய தினமே 2 லட்சம் பணத்தை பெற்றுக்கொண்டேன் என்றால் எழுதிக்கொடுத்த சொத்திற்கு பணத்தை பெற்றுக்கொண்டேன். பட்டிகைசொத்து ரப்பர் புரையிடம் என்றால் சரிதான். பால் வெட்டக்கூடிய ரப்பர் புரையிடம் என்றால் சரிதான். மேற்சொன்ன கிரைய ஒப்பந்தப்படி பால் வெட்டும் அனுபவம் எனக்கும் கைவசத்தை அவரிடம் ஒப்படைத்துள்ளதாக சொல்லியுள்ளது என்றால் சரியல்ல.

2. நான் சொல்வது பொய் என்றாலும் மேற்சொன்ன கிரைய ஒப்பந்த ஆவணத்தில் பால் வெட்டும் அனுபவம் எனக்கும் கைவசம் அவருக்கும் என்று சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பிரதிவாதி அவருக்கு உரிமைப்பட்ட சொத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் ஏற்படுத்தியுள்ளார் என்றால் பி-பட்டிகை சொத்தையும் சேர்த்து காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார். பிரதிவாதி பி-பட்டிகை சொத்தை சுற்றி காம்பவுண்ட் சுவரை அமைத்ததை நான் தட்டிக்கேட்கவில்லை என்றால் சரிதான். ஆனால் கமிஷனர் மேற்சொன்ன பகுதியை அளவீடு செய்தார். இது சம்மந்தாமாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். மேற்சொன்ன புகார் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் கொடுத்தாக நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் என் மனைவியும் சேர்ந்து தான் பிரதிவாதிக்கு ஒத்துழைப்பு வழங்கி தான் மேற்சொன்ன காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன கிரைய ஒப்பந்தப்படி கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்காமல் காலதாமம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

3. பி-பட்டிகை சொத்தில் 66 சதுர அடி லிங்ஸ் சொத்தை பொறுத்து பிரசனை உள்ளதாக சொல்லி எழுதிக்கொடுக்காமல் காலதாமம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் காலதாமம் செய்து வந்ததால் தான் பிரதிவாதி ஏ-பட்டிகை சொத்தை பொறுத்து மட்டும் 08.12.2018-ல் விலை ஆவணமாக எழுதி வாங்கி கொண்டார் என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியவாறு பிரதிவாதி பி-பட்டிகை சொத்தை அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு ஏதும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பி-பட்டிகை சொத்தையும் சேர்ந்து கிரையம் செய்து கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.